**Editor's Note**

Please address all communication for the English pages to The English Editor, 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 O Published Every Friday

Vol. 139 JAFFNA, FRIDAY, 21ST SEPTEMBER, 1979 No. 37

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 25/- per year.

Foreign Air Mail: Rs. 90/- per year.

*Apply to:*

The Manager, 'Morning Star', VADDUKODDAI.

## The Jaffna College Prize Giving

The Annual Prize Giving of Jaffna College, Vaddukoddai was held on Wednesday 19th of September in the College Quadrangle.

Professor K. D. Arudpragasam, B. Sc. Ph. D., Professor and Head of the Department of Zoology of the University of Colombo was the Chief Guest Mrs. W. R. Holmes distributed the prizes.

The progrmme commenced with the lyric "எத்தனை நாவால் துதிப்பேன்" and Prayer offered by Dr. W. R. Holmes. A playlet in English, "*Lost and Found*", by the Junior School and "a Narration" by a student, were other features of the delightful evening's programme.

The President of the School Council, S. Jeyendran proposed the Vote of Thanks It was seconded by Mr. W. D. Kulathungam of the staff.

A detailed Report will be given in our next issue.

## The Director of the Jaffna College Technical Institute Honoured

Mr. S. Rajanayagam, the Director of the Jaffna College Technical Institute and the Manager & Authorised Representative of Jaffna College, and the former Chairman of the Jaffna College Board of Directors has been invited to Seoul in South Korea to attend a Conference of the Asia Electronics Union. This is the Tenth of the once in two years meeting for Electronics Enginesrs and Manufacturers from Asia and Oceana. At Seoul this year there will be seventeen countries participating including representatives from Japan, Australia, India and from some International agencies like UNESCO. He has been invited to this meeting as a founder member and the first signatory to the agreement inaugurating the Union. He will receive the title of Honorary Member on 28th September, will deliver an address on 29th, and attend the General Assembly on 2nd October. He also expects to visit some of the Technical establishments there during this trip.

## The Church of Christ in Thailand

Students and Staff of the Thailand Theological Seminary are experimenting with a new way of communicating the gosphel.

*Ligay* is a popular and traditional form of iadigenous dance drama. The traditional Thai instrument which is used to accompany the drama is the *ranad.* With the help of some of the professionals, the theological students were able to put some of the gosphel stories into *Ligay* Form.

The first gosphel story experimented was *The Prodigal Son* in a Thai setting. But as there were more talents among the girls than among the boys, the story was changed into "the Prodigal daughter" with a girl, her mother and the older sister.

The response was very favourable. The drama Evangelistic Team had an average crowd of 300 to 400 people to every one of their performances. The indigenous culture too was permeated with "the good news" and the team had several invitations from local churches who were able to draw large crowds of non-Christians for performances of "The Prodigal Daughter".

*Living in Faith*

## ASIA YOUTH RESOURCE CONFERENCE

The Youth Desk of the Christian Conference of Asia hopes to hold the Asia Youth Resource Conference in November this year, "to prepare, to form, to nurture the young people to become committed to Christ ecumenically and to became aware about the situations confronting them. The Conference is intended to be a resource of exchange.

Bible studies will be on the following subjects;—

- Living in Faith according to the Gosphels
- Living in Faith in the minority church
- Living in Faith under repressive rule
- Living in Faith in an affluent society
- Living in Faith amidst exploritation
- Living in Faith in a Foreign country
- Living in Faith within religious diversities

Theve will be provision for a 'live-in' period and a workshop on "worship"

Forty participants between the ages of 18 and 25 will take part in this Conference. Details will be announced later.

*Christian Educatt n Workshop*

The above workshop convened by the Education Desk of the CCA was held recently in Singapore. Sri Lanka was represented among 14 countries which took part.

Two examples of the difficulties raised at the workshop are the problems of the Christian Churches in Pakistan and Burma Both Governments are nationalasing Church property. The difficulties imposed by Government control in Pakistan and Burma include limited practical resources, communication limitations, and illiteracy and harassment by state officials. Sunday is no longer their day of worship.

Christian Educators in these countries have daunting barriers which are being faced squarely and resolutely.

The NCC Executive Committee in Pakistan has called upon the government to take steps to stop "the steady marginalisation of the Christian community.

## A Welcome move

The screening of movies during the morning hours will soon be banned, (except on public holidays) in the cinema halls in the city, according to a news report in the *Sun* (24-8-79).

The member of the Municipal Council moving the motion pointed out that the government was spending large sums of money towards Education and parents also spend a fair portion of their income towards the education of their children. He said that it was regrettable to note school children with books in their hands joining queues in front of cinema halls while school was in session.

It will be good if other local bodies fall in line with the Colombo Municipal Council in banning morning movies.

## *IN BRIEF ............*

- *National Insurance Corporation* — Mr. Lionel Fernando, former G. A. Jaffna is the Chairman — Designate of the New Insurance Corporation which will begin business on 1-1-80. The new Corporation will differ from the present one in allowing employees to hold shares in the Corporation. It will be established in Colombo and will not be handling Life Insurance policies at the beginning.
- *United Nations Development Programme*: 150 Engineers are to be deployed from India under the UNDP Scheme to counter the serious dearth of Engineers in the country. It is estimated that the number of Engineers who have migrated from Sri Lanka from May 1971 to December 1976 is 1074. The largest number of vacancies are in the Highways Department where 81 out of a total of 200 engineer posts are vacant.
- *Pre-Paid Tickets*: According to a news item in *Sunday Times*, the government has decided to keep a close watch on persons travelling abroad on pre-paid tickets. This is a sequel to a report submitted to the government, by the Ministry of Foreign Affairs.
- *Education Seminar*: Mr. George Mendis, Deputy Director Goneral of Education has left for Australia on an invitation by the UNESCO and ESCAP to present a paper on 'Rural School Development' at the Seminar on *Curriculum Development* which is currently meeting in Australia (Sept. 10 to 22).

## IN MEMORIAM

IN EVER LOVING MEMORY OF

**Dr. S. J. AIYATHURAI**

called to rest 25th September, 1967

It's twelve years since we have been parted

"Have Thine-own Way Lord"

*Inserted by his loved ones*

16, Somasundram Avenue, Chundikuli.

G. J. AIYATHURAI

## IN MEMORIAM

IN EVERGREEN MEMORY OF

**Samuel Moothathamby Arumugam**

*(Principal of Uduthurai M. V.)*

Called to rest: 25-8-1979

Memorial Service: 24-9-1979 (8-30 a.m.)

"Not my will but Thine will be done"

*Fondly remembered and missed by your lovrd ones*

Uduthurai South, Chempianpattu.

His eldest son A. JEYARAJAH

## Appointment Vacant

A Mechanical Engineering Graduate from about January, 1980.

Salary scale Rs. 650/- to 1200/- per mensem and allowances.

*Candidates can apply pending results*

Application form available in Institute Office.

**Director, Jaffna College Technical Institute, Vaddukoddai.**

## A Thanksgiving Service

FOR THE

Life and work of

**Kanagam Subramaniam**

will be held at

Chavakachcheri Church at 4-30 p.m, on

Saturday the 6th October

you are cordially invited

N. SUBRAMANIAM AND CHILDREN

# உதயதாரகை
UTHAYATHARAKAI
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 139 ] 21 — 9 — 1979 [ இதழ் 37


## உருவாகும் ஒன்றிணைப்பு

காந்தர்புரிப் பிரதம அத்தியட்சராயிருந்து இளைப்பாறும் கலாநிதி டொனல்ட் கோகன் அவர்களின் இடத்தில் கலாநிதி றெபேர்ட் றங்கிள் நியமிக்கப்பட்டுள்ள செய்தியை இவ்வெளியீட்டிற் தந்துள்ளோம். இவர்களின் நியமனத்தைப் பாராட்டுபவர்கள் வேறெந்தக் காரணத்தைத்தான் கொண்டிராவிட்டாலும் ஆங்கிலேயத் திருச்சபையைச் சபை ஐக்கியத்தின் வழியில் நடத்திச் செல்வதற்கு இவர்கள் மிகவும் தகுதி வாய்ந்தவர்; ஆவலுமுடையவர் என்பதை மனதிற் கொண்டிருப்பர். கிறிஸ்தவ உலகம் முழுவதும் அந்தச் சிறப்பு வாய்ந்த இலக்கை நோக்கித் தொடர்கிறது. அதை இதற்கு முன்னரே ஆரம்பிக்கவில்லையே என்பதுதான் குறை. எப்படியும் இனிக் காலந்தாழ்த்த முடியாத கட்டம் இது.

அரசியற் காரியங்களில் கொள்கையொற்றுமை கொண்ட நாடுகள் ஒன்றுபட்டுச் செயலாற்றுகின்றன. பொருளாதார ரீதியாக முன்னேற்ற நாடுகள் வளர்முக நாடுகளுக்கு உதவிக் கரம் கொடுத்துக் கைதூக்கிவிடுகின்றன இணைவுள்ள கலாச்சாரங்களைக் கொண்ட சமூகத்தினர் அவைகளை வளர்க்கவும் அவற்றின் முழுமையான பயனையடையவும் ஒன்றுக்கொன்றிணைந்து வாழ்கின்றன. சர்வலோக சமாதானத்தைக் கண்டுவிட்டோம் என இவை காட்டவில்லையென்பதுண்மைதான். எனினும் ஒன்றுபட்டு வாழ்வதன் விளைவுகளை ஓரளவிற்காவது இந்நாடுகள் கண்டனவென்பதற்கு இவை அத்தாட்சியெனலாம். லோகாாததமாய்ப் பார்க்கிலும் ஐக்கியத்தின மகத்துவத்தைக் கிறிஸ்தவ உலகம் காணுதிருக்கமுடியுமோ?

வரும் வெள்ளிக்கிழமையன்று தென்னித்தியத் திருச்சபை தன் தாபகத்தின் 32 ஆம் வருடோற்சவத்தைக் கொணடாடவுள்ளது. திருச்சபையின் பொதுவான சரித்திரத்திலும், சபை ஐக்கிய வரலாற்றிலும் தென்னிந்தியத் திருச்சபையின் தாபகம் அதிமுககியத்துவம் வாய்ந்த ஒன்றெனக் கணிக்கப்படும். அத்தாபகத்தைச் "சர்வலோகச் சபை ஒற்றுமையின் முற்குமுறல்" (Rumblings of a world-wide unity of Churches) என்கிறேம். அது உண்மையே. இந்த 32 ஆண்டுகளும் தெ. இ. திருச்சபை வலிமையும் வளர்த்தியும் பெற்றுள்ளது; பின் வந்த பிற ஐக்கியங்களுக்கு இது மாதிரியாயும் அமைந்தது. ஆரம்பததலே இநத ஐக்கியத்தற்குள் சேராதிருந்த ஐந்து சபைகள் அல்லது சபைப் பிரிவுகள் வெவ்வேறு காலங்களில் இதன் ஐக்கியத்திற்குள் சேர்ந்துகொண்டது இந்த வளர்ச்சியைக் காண்பிக்கும். இதை நாம் காணும்போதும், இநதப் பரீட்சார்த்த முயற்சி பயன்தராதொழிந்துபோம என்றவரின் வார்த்தைகளை நாம் சிந்திக்கும்போதும் சங்கீதககாரனேடு கூட: "அது கர்த்தராலே ஆயிற்று; அது நம்முடைய கணகளுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" எனக் கூறவே ஏவப்படுகிறேம்.

தெ. இ. தி. ஐக்கியத்தைச் சிறப்புடையதாகச் செய்யும் அம்சங்களிற் பிரதானமானது அத்தியட்சர் ஆளுகைச் சபைகளும் பிற சபைகளும் ஒன்றுபட்ட தன்மையென்பதே நம் கருத்து. வெறும் வெளியரங்கமான "கூட்டணி"யாயிராமல் ஒரே சபையாய்க் கருதப்படும், கருமமாற்றும் நிலைக்கு இச்சபைகள் ஒன்றுபட்டிருக்கவும், பெலனடைந்து வளரவும் கூடுமானல், உலகெங்குமுள்ள ஆங்கிலேயத் திருச்சபை பிற சபைகளுடன ஒன்றிணைந்து வாழ்வது கடினமென எவரும் கொள்வதற்கில்லை. சுயநலங்கருதிகள சிலரின் கிரியைகள் நம் நாட்டிலும் இன்னும் சில பிற இடங்களிலும் இப்பேர்ப்பட்ட ஐக்கியத்திற்குத் தடைபோட்டதுண்டெனினும் அதுவே முயற்சிகளின் இறுதி முடிவெனச் சொல்லோம்.

ஆதலாற்றுன் காந்தர்புரிப் பிரதம அத்தியட்சர் அவர்கள் சபை ஐக்கியத்துற்காக எடுக்கும முயற்சிகள் வெற்றி தருமெனக் கூறத் துணிகிறேம். அப்பேர்ப்பட்ட ஐக்கியத்தை உலகம் எதிர்பார்க்கிறது; அவசியமாய்த் தேவைப்பட்டும் நிற்கிறது. தமமுடையோர் அனைவரும் ஒன்ருயிருக்க வேண்டுமெனச் செபித்த நம் ஆண்டவரும் நம் முயற்சிகள்மேற் கண்ணேககமாயிருக்கிருர் முனனேறிப்போகும் ஐக்கியத்தின் முயற்சிகளுக்குச் சுயநலம கருதும் நாம முட்டுக்கட்டை போடாதிருக்கக் கற்றுககொளளுவோமா? கலாநிதி றங்கிள அவர்களின் பதவிக் காலத்திலேயே இப்பேர்ப்பட்ட சம்பூரண ஐக்கியத்திற்கான உறுதியான அத்திபாரம இடப்படுவதைக் காண்பதே நம் பேரவா.

## பராமரிப்பு நிலையம்

பாணந்துறையிலுள்ள மெதடிஸ்த சபையின் ஆதரவில் வறிய பிள்ளைகளுக்கான பகல் வேளைப் பராமரிப்பு நிலையம் ஒன்று சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மூன்று வயதுக்கும் ஐந்து வயதுக்குமிடையிலான 42 ஏழைப்பிள்ளைகள் இந்நிலையத்தில் இலவசமான ஆகாரமும் சுகாதார வசதிகளும் அளிக்கப்பட்டு, பாடசாலையிற் சேர்வதற்கு முன்னுன இரண்டு வருடப் பயிற்சி கொடுக்கப்படுவர். இலங்கை மெதடிஸ்த சபைத் தலைவர் கனம் P. B. இராஜசிங்கம் அவர்களின் ஊக்கமான முயற்சியினுல் K. H. N. ஸ்தாபனத்திடமிருந்து இந்நிலையத்திற்கான பண உதவி வாக்களிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் திறப்பு விழா வைபவத்திற்பேசிய வண. மொறட்டுவ சாசஞரத்தின அநுநாயக்க தேரோ அவர்கள்! ஒரு நாட்டின் தலைசிறந்த பொக்கிஷம் அதன் பிள்ளைகளே. எனவே இந்த நிலையத்தை ஆரம்பித்த மெதடிஸ்த சபையின் செயல் பாராட்டுக்குரியது என்றுர்கள்.

## யாழ்ப்பாண அத்தியட்சர் அவர்களின் பிறநாட்டுச் சந்திப்புகளும் விடுமுறைப் பிரயாணமும்

ஆதீன வருடாந்த நிருபத்திலிருந்து எடுக்கப்பட்டது.]

சென்ற ஏப்ரல் மாதத்தின் கடைப்பகுதியில் ஆங்கிலேயத் திருச்சபையின் ஆலோசனைச் சங்கக் கூட்டத்திற் சேர்ந்துகொள்வதற்காகப் பிறநாடு சென்ற நமது அத்தியட்சர் அவர்கள் அந்தத் தருணத்தைப் பயன்படுத்தி இன்னும் சில சந்திப்புகளை மேற்கொண்டார்கள். ஐந்து நாட்கள் நியூ யோர்க் நகரில் தங்கியிருந்து (U. C. B. W. M.) சர்வலோகப் பணிக்கான ஐக்கிய சபைச் சங்கத்தின் ஒரு கூட்டத்திற்குச் சமுகமளித்தனர். உணர்ச்சிவசப்படுத்தும் ஒரு நிகழ்ச்சி இக்கூட்டத்தில் இடம் பெற்றது. பிலிப்பைன் தீவுகளில் மிஷனரியாகக் கடமையாற்றிப் பத்தொன்பது நாட்கள் வரை கடத்திச் செல்லப்பட்டிருந்த கனம் லோயிட் வான் வெக்ரர் (Rev. Loyed Van Vector) அவர்கள் நன்றி செலுத்தும் ஆராதனையொன்றிற் சாட்சி கொடுத்தார்கள். கடத்தலிலிருந்து மீட்படைந்ததும் தனது மனைவியின் மரணத்தைக் குறித்துக் கேள்விப்பட்டார்கள். இந்தக் கிலேச சம்பவத்திலும் அவர் காட்டிய விசுவாசமும் கிறிஸ்தவத் தைரியமும் மெய்யாகவே அருட்சியூட்டும் காரியங்களாயின. இன்னும் மேலாக, கிறிஸ்தவனுய் இருப்பதென்றுல் ஆபத்திற்கேதுவாய்ச் சீவிக்கவும் ஆயத்தமாயிருப்பதென்ற சத்தியத்தை இச்சம்பவம் அங்கிருந்த அனைவருக்கும் நினைவூட்டியது.

ச. லோ. ப. ஐ. சபைச் சங்கம் உலகின் ஆறு கண்டங்களிலும் ஒப்பேற்ற வேண்டிய வேலைகளை மேற்கொண்டுவருவது. இப்படியாக அகில உலகிலும் நமக்குக் கூட இருப்பதான கரிசனையைக் காண்பது மிகவும் உதவியாயிருந்தது.

இந்தக் கூட்டத்தின் பின்னர், ரேட் ஐலண்ட் சபைச் சங்கத் தலைவர்கள் நமது அத்தியட்சர் அவர்களைக் கிங்ஸ்ரன் நகருக்கு வரவழைத்தனர். அங்கே திருமதி லோறி கொப் அவர்களின் இல்லத்தில் நடத்தப்பட்ட ஒரு விருந்துபசாரத்தில் பலர் அத்தியட்சர் அவர்களைச் சந்தித்து நமது திருப்பணி ஊழியப் பங்காளித்துவத்தின் வருங்கால வாய்ப்புகளைப் பற்றிக் கலந்து பேசினுர்கள். அத்தியட்சர் அவர்கள் பேராசிரியர் திரு. கொப் அவர்களையும் பிள்ளைகளையும் சந்திக்கக்கூடியதாயிருந்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். Bob பேர்பேரக், சக் ஏர்ப், திருமதி ஏர்ப் ஆகியோரும் அங்கிருந்தனர். யாழ்ப்பாணத்துச் சபையின் சீவியம் ஊழியம் ஆகியவற்றைத் திருமதி கொப் அவர்கள் விரித்துரைத்த திறமை மிகவும் வியக்கப்படக்கூடியதாயிருந்தது. இந்த ஊழியப் பங்காளித்துவத்தில் இன்னும் கூடிய கருத்துடைய விருத்திகளை எதிர்பார்த்திருக்கிறேம்.

மே மாதத்தின் கடைசி வாரத்திற் சில நாட்களை அத்தியட்சர் அவர்கள் இங்கிலாந்திலே செலவிட்டார்கள். இங்கே தனது பிரதான அலுவலாக லண்டனிலுள்ள பற்னி மெதடிஸ்த ஆலயத்தில் மாதத்திற்கொரு முறை வணக்கத்திற் கூடும் தமிழ்க் கிறிஸ்தவர்களின் தமிழ் ஆராதனையிற் பிரசங்கம் செய்தார்கள். கனம் S. M. ஜேக்கப், திருமதி ஜேக்கப் ஆகியோர் இந்தக் கூட்டத்தினரை மிகுந்த திறமையுடனும் ஞானத்துடனும் கண்காணித்து நடத்தி வருகின்றனர். இந்த ஐக்கியத்திற் கலந்துகொண்டது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாயிருந்தது.

ஜூன், ஜூலை மாதங்களிற் சுமார் ஐந்து வாரங்களை அத்தியட்சர் அவர்கள் சுவிற்சலாந்தில் செலவிட்டார்கள். இதிற் பெரும்பகுதியான காலத்தில் பொஸ்ஸே நகரிலுள்ள (Ecumenical Institute) சபை ஒன்றிணைப்பு ஸ்தாபனத்திற் தங்கியிருந்து இறையியல், சபை ஐக்கியம் சம்பந்தமான சில மகாநாடுகளிற் பங்குபற்றினுர்கள். பாசல் நகரிலே நடந்த பாசல் மிஷன் வருடாந்த விழாவிலும் அவர்கள் சமுகமாயிருந்தனர்.

திரும்பும் வழியில் அமிஸ்ரடாம் விமான நிலையத்திற் சிறிது நேரம் தரித்துத் தம்மைக் காண வந்திருந்த திரு. C. B. பாவிங்க், திருமதி பாவிங் ஆகியோரைச் சந்தித்தார்கள். சமீபத்தில் நடந்த இரத்தாசயச் சத்திர சிகிச்சையின் பின் திரு. பாவிங்க் முன்னிருந்த சுகத்தைப் பெற்றிருப்பது நம்மெல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் ஒரு செய்தி.

* * *

ஆறு வருடத்துக்கு ஒரு முறையாகத் தென்னிந்தியத் திருச்சபையின் அத்திட்சர்மாருக்கு அருளப்படும் விடுமுறையைக் களிப்பதற்காக நமது அத்தியட்சர் அவர்கள் இம்மாதம் 11-ந் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்கள். அமெரிக்காவில் நியூ ஜேர்ஸியிலுள்ள பிறின்ஸ்ரன் இறையியற் கலாசாலையைச் சேர்ந்து சர்வதேச மாணவர்க்கான ஒரு பல்கலைத் திட்டத்தை மேற்கொள்ளுவார்கள். வரும் மே மாதம் திரும்பிவரக் காத்திருக்கிறுர்கள். ஆதீனத்தின் வேண்டுதல்களும் நல்லாசிகளும் அவர்ளுக்கு உரித்தாகும்

## புதிய பாடசாலைகள்

வரும் ஆண்டில் நாட்டின் பல்வேறு பாகங்களில் பதினேந்திற்கும் மேலான புதிய மத்திய மகா வித்தியாலயங்களைத் தாபிப்பதற்குக் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. நாட்டில் வெவ்வேறு துறைகளிற் தலைவர்களாய் விளங்கினவர்களின் நாமங்கள் இவைகளுக்குச் சூட்டப்படும். யாழ்ப்பாணத்தில் எஸ். ஜே வீ. செல்வநாயகம் மத்திய மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறையில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் மத்திய மகா வித்தியாலயம் ஆகியன இவற்றில் இரண்டாகும். கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களிலும் இவை நிறுவப்படும்.

## பரீட்சையிற் சித்தி

வரணி-குடத்தனைத் திருச்சபைகளின் ஊழியனும், வரணி மிஷன் பண்ணை முகாமையாளனுமாகிய அருள்திரு. M. இராஜகுலேந்திரன் சிறம்பூர் வேத சாஸ்திரக்கழக B. D. பட்டப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனும், அளவெட்டி - சண்டிலிப்பாய்த் திருச்சபை ஊழியன் திரு J. S. மார்க்கண்டு, திருமதி J. S. மார்க்கண்டு ஆகியோரின் கனிஷ்ட புதல்வனுமாவர்.

## திரு. எட்வின் பிளாய்க் — சிவிய ஸ்தோத்திர ஆராதனை

இம்மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு, சங்கானைத் திருச்சபையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. எட்வின் பிளாய்க் அவர்களின் சீவியத்திற்கான ஸ்தோத்திர ஆராதனை, அச்சபை ஆலயத்தில் சேகரக்குரு கனம் சாம் தம்பு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திருமதி மேரி இராசரத்தினம் மாணிக்கம் அவர்களின் தேவாரத்துடன் ஆராதனை ஆரம்பமாகியது. வேத பாடங்களை முறையே திருமதி J. M. சபாரத்தினம் அவர்களும் செல்வன் R. நவரத்ணம் அவர்களும் வாசித்தார்கள். சபை ஊழியன் கனம் A. ஜெயக்குமார் துதிமாலை ஏறெடுத்தார். முன்னைநாள் சபை ஊழியன் திரு. S. J. மாணிக்கம் அவர்கள் காலஞ்சென்ற திரு. எட்வின் பிளாய்க் அவர்களின் வாழ்க்கைச் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறினார். இவர் நல்ல உறுதியான விசுவாசத்துடன் விளங்கிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். இவரது தாய் தந்தையர் மிகவும் உன்னத கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து பலருக்குஞ் சாட்சியாக விளங்கியவர்கள். அவர்களது பிள்ளைகளிடத்திலும் அமைதியான வாழ்வும் உறுதியான விசுவாசமும் காணப்படுவதை இன்றும் நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது. அதேபோன்று திரு. எட்வின் பிளாய்க் அவர்களின் வாழ்க்கையும் அமைந்திருந்ததெனவும் கூறினார்கள். இவர் இலண்டன் பல்கலைக் கழகத்தில் பொறியியலாளராகப் பட்டம் பெற்று, நீண்ட காலம் இங்கிலாந்தில் கடமையாற்றி அனுபவம் பெற்று இலங்கைக்கு 1934-ம் ஆண்டு திரும்பினார். அரச சேவையில் பொறியியலாளராகச் சேர்ந்து இலங்கைப் புகையிரதப் பகுதியின் பிரதம முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுக் கடமையாற்றினார். 1958-ம் ஆண்டு ஓய்வுபெற்று 'பாங்கொக்' சென்று அங்கு ஐக்கிய நாட்டுச் சபையின் "ECAFE" என்னும் ஸ்தாபனத்தின் தலைவராகக் கடமையாற்றினார். 1968-ம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பி, பியூரோ ஸ்டாண்டர்ட் ஸ்தாபனத்தின் இயக்குநராகக் கடமையாற்றினார்.

இவர் கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியுடையவராகவும் விளங்கினார். சபைக்கு வேண்டிய சகல உதவிகளையுஞ் செய்து வந்தார். அத்தியட்சாதீன சங்கத்தில் சங்கானைத் திருச்சபைப் பிரதிநிதியாகவும், அத்தியட்சாதீன சங்க வைத்திய குழு அங்கத்தவராகவும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பக் கட்டட நிர்வாகக் குழு அங்கத்தவராகவும் ஆலோசகராகவும் கடமையாற்றிப் பயனுடைய சேவையை ஆற்றிவந்தார்.

பொறுமை, இரக்கம், அன்பு, தாழ்மை ஆகிய சிறப்பியல்புகளின் பிறப்பிடமாக மிளிர்ந்தார். பலர் இவரை என்றும் ஞாபகப்படுத்தும் தன்மையில் இவர் பலருடைய வாழ்வில் உதவி செய்து பங்கு கொண்டுள்ளார். தேவ சித்தத்துக்கு மாறாக ஒன்றும் நடைபெறுதென்ற உறுதியான விசுவாசமுடையவராகவும் காணப்பட்டார்.

தொடர்ந்து கனம் S. மனோபவன் பிரசங்கஞ் செய்தார். அத்தியட்சர் மகா கனம் D. J. அம்பலவாணர் அவர்கள் ஞாபகார்த்தக் கல் திரை நீக்கஞ் செய்து வைத்து, ஜெபஞ் செய்து ஆசீர்வாதம் கொடுத்தார். ஆராதனை இனிது முடிவுற்றது.

நி — ர்,

## புதிய காந்தர்புரிப் பிரதம அத்தியட்சர்

உலகிலுள்ள 650 இலட்சம் ஆங்கிலேய சபையினரின் ஆத்மீகத் தலைவராகக் காந்தர்புரிப் பிரதம அத்தியட்சர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர் 57 வயதான கலாநிதி ருெபேர்ட் றங்கின் ஆவர். இவர் 102 ஆம் காந்தர்புரி அத்தியட்சராவர். ஆங்கிலேய சபைக்கும் வைதீக சபைகளுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட, கொள்கை சம்பந்தமான ஆணைக்குழுவின் அக்கிராசனராக 1973 ஆம் ஆண்டிலிருந்தே கடமையாற்றிய கலாநிதி றங்கின் அவர்கள் சபைகளுக்கிடையிலான விவகாரங்களில் தேர்ந்த ஒருவரெனவும், அதன் நிமித்தமாகச் சபைகளை ஐக்கியத்திற்குள் நடத்திக் கொண்டு போவதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவர்களாய் இருப்பரெனவும் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமது புதிய நியமனத்தைக் குறித்துத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தம்மைப் பேட்டி காண வந்த நிருபர்களோடு பேசிய கலாநிதி றங்கின் அவர்கள்: ஆங்கிலேயத் திருச்சபை, பிற சபைகளின் தொடர்பில்லாமல் தானே காரியங்களைப் பேசும், நடப்பிக்கும் காலம்மாறிவிட்டது என்றும், வெகுவிரைவில் தாம் பாப்பரசரையும் பிற சபைத் தலைவர்களையும் கண்டு பேச எத்தனிப்பதாகவும் கூறினார்கள்.

## பகிஷ்கரிப்பு ஏவுதல்

ஹாவன்னாவில் சமீபத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த அணிசேரா நாடுகளின் மகாநாட்டில் எருசலேமை இஸ்ரவேலின் தலைநகரென ஏற்றுக்கொண்டிருக்கும் எல்லா நாடுகளுடனும் உண்டான சகலவித உறவுகளையும் துண்டித்துப் போடும்படி அணிசேரா நாடுகள் நிறுவனத்தின் 96 அங்கத்துவ நாடுகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன. பாகிஸ்தானின் தூண்டுதலினால் விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோள் "ஹாவன்னா பிரதிக்கினை" என்ற 35,000 சொற்கள்கொண்ட ஒரு வாசகத்தில் போடப்பட்டுள்ளது. அராபியர் ஆட்சிக்குள் எருசலேம் முழுவதும் கொண்டு வரப்படுதலே நிலையான சமாதானத்திற்கு ஒரேயொரு வழியாகும் எனவும் ஐ. நா. சபை எருசலேமைப் பற்றியும் பிற பரிசுத்த தலங்களைப் பற்றியும் ஏற்கனவே செய்திருக்கும் தீர்மானங்களைக் கடைப்பிடிக்கும்படி இஸ்ரவேல் வற்புறுத்தப்பட வேண்டுமெனவும் இப்பிரதிக்கினையிற் கண்டுள்ளது.

இஃதிவ்வாறாக, அணிசேரா நாடுகளின் இந்த ஆறுவது மகாநாட்டின் முடிவுகளையும் தீர்மானங்களையும் மிகச் செவ்வையானவையெனப் பாராட்டி ரஷ்யா இந்த மாநாடு முதலாளித்துவ நாடுகளுக்கு எதிரான ஒன்றென்பதை இத்தீர்மானங்கள் காண்பிக்கிறது எனக் கூறியது. அணிசேரா நாடுகள் நிறுவனத்தின் அக்கிராசனப் பதவி கியூபாவிற்குக் கொடுக்கப் பட்டதையும் சோவியத் ரஷ்யா மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்றது.

## செய்திகளின் சாரம்

### புதிய பாடங்கள்

சர்வதேச விவகாரங்கள், பொருளாதார நிலைகள் என இரண்டு பாடங்களைப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வது பற்றிச் சிந்திக்கக் கல்வியமைச்சரின் தலைமையிலான அமைச்சர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பிரச்சனைகள், நிறைவேற்றங்களைப் பிள்ளைகள் அறிந்துகொள்வதற்கு இவை உதவும் எனக் கருதப்படுகிறது.

* * *

### பாதுகாப்பு நடவடிக்கை

அமைச்சர்களின் பாதுகாப்பு நடவடிக்கையாக இரண்டு காரியங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. பாதுகாப்புச் சேவையில் அமைச்சர் பாதுகாப்புப் பிரிவு என ஒரு புதிய பிரிவு உண்டாக்கப்படவுள்ளது. அமைச்சர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வமான கார்களில் மத்திய பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளக்கூடிய றேடியோத் தொடர்புச் சாதனங்கள் அமைக்கப்படவுள்ளன.

* * *

### எண்ணெய் விலை அதிகரிப்பு

சமீபத்தில் நடந்த வர்த்தகக் கருத்தரங்கு ஒன்றிற் பேசிய வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத்முதலி அவர்கள் வருங்காலத்தில் எண்ணெய் உற்பத்தி குறைந்து போகும் எனவும், அதன் காரணமாக வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் பெற்றோல் கலன் ரூபா 50 ஆகவும் மண்ணெண்ணெய் ரூபா 25 ஆகவும் இலங்கையில் விற்கப்படக்கூடுமெனவும் கூறினார்கள்.

* * *

### பிறந்த நாள்

நாட்டு முதல்வர் J. R. ஜெயவர்த்தனா அவர்கள் இம்மாதம் 17 ஆம் திகதியன்று தமது 73 ஆம் பிறந்த தினத்தைக் கண்டனர். நாட்டின் பல பாகங்களிலும் இந்த நாளுக்கான விசேட வைபவங்கள் நடத்தப்பட்டன. அதிகமானவை நாட்டு வளர்சிக்கும் முன்னேற்றத்திற்குமான நடவடிக்கைகளைச் சார்ந்தவையாயிருந்தன. சமய சம்பந்தமான ஆசாரங்களும் இடம்பெற்றன.

* * *

### இந்தியத் தேர்தல் ஒப்பந்தம்

வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்தியப் பொதுத் தேர்தல்களில், முன்னைய இந்தியப் பிரதமர் திருமதி காந்தி அவர்களின் காங்கிரஸ் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தத்தின்படி தமிழ் நாட்டிலே காங்கிரஸ் கட்சி 23 ஸ்தானங்களிலும் தி. மு. கழகம் 5 ஸ்தானங்களிலும் போட்டியிடும்.

* * *

### வட இந்தியா — இனக்கலவரம்

இஸ்லாமியருக்கும் இந்துக்களுக்குமிடையிலான இனப் போராட்டம் பழைய டில்லியைச் சுற்றியுள்ள சில இடங்களில் பரவத் தொடங்கியது. வாரத் தொடக்கத்திற் சுமார் 30 பேர் காயப்பட்டிருந்தனர். கடைகளும் பிற கட்டடங்களும் எரிக்கப்பட்டன. காவற்படையினர் கடும் நடவடிக்கை எடுத்தனர்.

* * *

### போர்க் கப்பல்களுக்கு இடமில்லை

தனது போர்க் கப்பல்களில் இரண்டு இவ்வாரத்தில் மனிலாவைச் சந்திப்பதற்கு அனுமதி கோரி ரஷ்யா கேட்டதைப் பிலிப்பைன் தீவுகள் அங்கம் வகிக்கும் தென் - கிழக்காசிய நாடுகள் பேரவையுடன் கலந்தாலோசித்த பின்னரே இம்முடிவு எடுத்திருக்கப்படலாம் என நம்பப்படுகிறது.

* * *

### தானியப் பஞ்சம்

திரும்பவும் ஒருமுறை ரஷ்யா அனுபவிக்க வேண்டியதாயிருக்கும் விளைச்சல் குறைவினால் அமெரிக்காவிலிருந்து குறைந்த பட்சம் 300 இலட்சம் தொன் தானிய வகைகளை ரஷ்யா வாங்க வேண்டியதாயிருக்கும் எனச் செய்திகள் கூறுகின்றன. இரண்டு நாடுகளுக்கும் இடையிலிருந்த 1972 ஆம் ஆண்டின் வர்த்தக ஒப்பந்தம் இஸ்ரவேல் சம்பந்தமான அரசியல் காரணங்களையிட்டுச் சில வருடங்களுக்கு முன் ரத்துச் செய்யப்பட்டிருந்தது, எனினும் சமீப காலத்திலிருந்து வர்த்தகத் தொடர்புகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

## வேலை நியமனங்களில் நீதி நிலை

அரசாங்கத்திலும் அரசாங்கத் திணைக்களங்களிலும் வேலை வாய்ப்பு அளிப்பதில் எல்லாத் தேர்தற் றொகுதிகளுக்கும் நீதி நிலை கடைப்பிடிக்கப் படுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள தேர்தல் முறைகளுக்கிணங்கத் தேர்தல் தொகுதிகளுக்குப் பதிலாகத் தேர்தல் மாவட்டங்கள் (22 தொடக்கம் 24 வரையிலானவை) பிரிக்கப்படவுள்ளன. இந்தத் தேர்தல் மாவட்டங்கள் ரீதியாகவும் இது கடைப்பிடிக்கப் படுமென அறிவிக்கப் படுகிறது. சில தேர்தல் தொகுதிகளில் வேலை வாய்ப்பு வசதிகள் கொடுக்கப் படவில்லை என்று கொண்டு வரப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடைமுறை விதிகளை அமைச்சரவை தீர்மானிக்கவுள்ளது.

## சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள் அவசியம்

ஒரு அணுக்குண்டைத் தயாரிப்பதிற் செலவிடப்படும் தொகையை விட ஆயிரம் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களை நிறுவுவது எவ்வளவோ குறைந்த செலவாகும் என இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் உலகச் சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்காசியப் பிராந்திய குழுவை ஸ்தாபிக்கும் வேளையிற் கூறினார்கள். இப்பேர்ப்பட்ட குண்டுகளைத் தயாரிப்பவர்கள், உலகத்திற் சுமார் 80 விதமானோர் போதிய சுகாதார வசதிகள் இல்லாமல் அவதிப் படுகின்றார்கள் எனவோ அல்லது ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் போதிய பிரசவச் சிகிச்சை வசதிகள் இல்லாததினால் வருடந்தோறும் ஐந்து லட்சம் பெண்கள் மரிக்கிறார்கள் எனவோ உணருகிறார்களோ நான் அறியேன் எனக் கூறினார்கள்.

அடுத்த வருடம் வரையும் இப்பிராந்தியத்தின் சுகாதார நிலைகளை இந்தக் குழு அவதானித்து, முதன்முதலாகச் செயலாற்ற வேண்டிய பகுதிகளையும் வேலைகளையும் திட்டமிட்டுக் காரியங்களை நடப்பிக்கத் தொடங்கும் எனச் செய்திகள் கூறுகின்றன.

EDITORIAL

## Human Rights Perspectives

"There are values in life, more valuable than life itself" (Mahatma Gandhi). These were the words quoted recently by Dr. Yap Thiam Hien (65) a Christian lawyer of Indonesia — one of those in the front line struggle for Human Rights in a country where fifty per cent of the people are illiterate and where they are victims of a new "feudalism" — the power of those who hold better educational, social and economic positions in the country.

A member of the International Commission of Jurists, Dr. Yap is one of the few *honest* lawyers in Indonesia where out of a population of 140 million, there are only 500 lawyers. The reason is not far to seek. Judges and Prosecutors have more "access" to the public pocket. Dr. Yap is engaged in a continuing struggle for social justice in a State which speaks of responsible freedom but reserves the right to say whether the freedom a man enjoys is responsible or not.

Stephen Moon Ik-hwan, Founder of Galilee Church, (a congregation of 40 to 60 people) consists entirely of ex-prisoners and the families of those who are still serving their terms in the prisons of Korea. They begin the service with a period of sharing. The wife of a man accused of membership of a non-existent subversive organisation, and serving a life-term imprisonment reads out a petition she had submitted to the government. The wife of a young poet also in prison shares with the group her anxiety over an operation her husband has to undergo shortly. There are other voices too, all telling the same story — 'a story made up of pain patience and faith'.

There are ten million Buddhists and six million Christians in Korea. But that does not mean that there is religious freedom. Individual and hedonistic faith is encouraged but where a man's faith struggles against structural injustice in any given context, such faith becomes a target for suppression and ruthless political retaliation. [1985 will mark the 100th anniversary of the arrival of Protestant Missions in Korea]

In the Union of Soviet Socialist Republics according to *Amnesty International*, a 50 year old Russian Orthodox nun is confined to a special psychiatric hospital for charges of "engaging in prohibitive trade". The "trade" referred to, is not the illicit sale of narcotics, but the open sale of canvas belts embroidered with words from the 90th Psalm, to Christians. Steve Biko, (30), Founder of South Africa's Black Consciousness Movement who died of violence in detention at Pretoria a few years ago reminds us of South Africa where the law itself is a violation of the principle of equality of all races.

The power of Faith — be it Buddhist, Islam, Hindu or Christian— has never been dependent on "guns or missiles or on stock and shares". It always sustained itself in any situation. In this context events in the neighbouring continent of India stand out today in sharp focus. The President of India gave his assent to the controversial "Freedom of Religion Bill" passed by the State Assembly of Arunachel Pradesh in 1978. The Desai Government. spurred by Hindu Revivalists, became oblivious for the moment, even to Mahatma Gandhi's thought and philosophy. India, Mahatma Gandhi had said, was not only the land of the Hindus but also of Muslims, Sikhs, Parsis Christians and Jews. (a few days before his death, Gandhiji had in a statement opposed any *religious prohibition* even of cow slaughter). "Just as Muslim law cannot be imposed on non-muslims, so also Hindu law cannot be imposed on non-Hindus", he had said.

The chief objection that was taken by the Christians against the controversial "Freedom of Religion Bill" to which the Desai Government gave unbridled support was the use of the term "indigenous" in a specific context which implied that Christianity was a foreign religion. Subsequent events have now relieved the Desai government of the responsibility of passing the Bill and the Christians, of a government which turned its back obstinately to realities.

In sharp contrast to these scenes, we are happy that at home in Sri Lanka, the government has taken a very firm stand on the question of Human Rights.

> "Every man or woman is an equal citizen whatever is the person's religion, race or caste That is the Society we are trying to perfect — a just Society"

These words of President Jeyawardene, (taken from a Speech he made recently at Attanaglla on the auspicious occasion of distributing land to the landless) constitute the basic doctrine on which the UNP government has built all its Schemes, including those in the sphere of Development in the country.

The recommendations adopted by Lawasia at its Sixth Conference held recently in Sri Lanka to establish *a Standing Committee on Human Rights* has won the encomium of many people in the world including the Executive Secretary of the International Commission of Jurists (a delegate to the Lawasia Conference) who has commented that Sri Lanka is the most suitable place for the adoption of this recommendation.

"Those with dreams are rich" declared Moshe Dayan from his experience of building a Jewish State. We here in Sri Lanka have had in recent times certain 'dreams' which touch on 'sensitive areas' in our human rights problems. Whether we will ultimately become 'rich' with our dreams will depend largely on the commitment of the total community to the cause the government has espoused for the fulfilment of those dreams.

## Vacation Bible School at Chavakachcheri Church

The Chavakachcheri Church was the venue of another important event, the Vacation Bible School. On an invitation sent to the Lanka Vacation Bible School Movement to conduct classes at the Chavakachcheri Church, the Director Mr. Thevathason his wife Mrs. Cynthia Thevathason and another member of the Staff Miss Jeyakumari Dason arrived from Colombo on the 16th Aug. 1979 and met about 20 teachers and helpers who were to assist in the School. They had been prepared earlier with materials sent regarding the techniques which should form the basis of instruction in the School. Everything was set for the big event.

Classes began promptly at 9 on the 17th morning which were attended by 75 children from age 6 — 18. Each day started with the V. B. School Song which the children sang as they marched into and out of Church. Mrs. Thevathason led the devotions on the theme 'The Lord is my Shepherd' illustrated with pictures on flannel Classes were carried on each day from 9-30 — 11 with precision and care by the teachers. Children were supplied with 3 different materials to work on at 11 Mr. Thevathason acted out a beautiful story, carried on for five days leaving the children in suspense regarding its continuation.

On the final day, there was a beautiful service in which the parents participated. It was inspiring to see each class presenting an item based on the theme, 'The Lord is my shepherd'. At the end, Certificates of Merit were presented to every child and also for the best all-round performance in each class and for special merit. Teachers and helpers too were awarded Certificates for their devoted service.

The Final was grand Exhibition of the children's handiwork which received great praise from everyone present.

The Rev. K. S. Jeyasingam, the Presbyter and Mr. S. Arasaratnam the Sunday School Superintendent thanked the visitors for their programme. of Chavakachcheri.

*Church of Sri Lanka*

## Sunday School Rally

In connection with the International Year of the Child, a a whole day Rally of the Sunday School Children of all the Anglican Parishes in Jaffna was organised on Saturday 8th September at St. John's College, Jaffna. About twohundred children participated. The programme for the day opened with a worship service conducted by the Rev. J. Sarvananthan. Children enjoyed singing lively choruses sung to the accompaniement of the guitar played by Jeyanthan Anandarajan, a Sunday School child. The Rev. Isaac Selvaratnam gave a very interesting talk to which the children listened all attention.

The progrmme began with the tiny tots under sevsn taking part in a fancy dress parade. On the stage there paraded Adam, Eve Sampson, Goliath, David, Miriam etc. The judges had such great difficulty in sorting out the winners, that they finally recommended that four of them deserved prizes. The children then broke up for a drink and biscuits.

The next item was an oratorical contest for the seniors under seventeen. The subject of the speech was "How can I witness as a Christian today." The juniors under twelve had to recite from memory a part of the sermon on the mount (St. Mat. 5:12-16). There was then a lunch interval followed by an hour for games. The teachers and the Rev. Selvaratnam organised the games, which was thoroughly enjoyed by the children.

The afternoon programme began with the staging of playlets by the various Sunday Schools. One of the plays was the story of Joseph adapted to the stage. The others were social plays bringing the Christian perspective to bear on the situations. The last item was group singing contest for the intermediates under 14. Each Parish sang an English and Tamil song. This brought the programme to a close.

The children were then treated to a bun and a cup of tea. The prizes were distributed by Mrs. P. Kanagasabai the president of the Y. W. C. A., Jaffna. The Archdeacon of Jaffna offered the closing prayers and gave the Blessing. A vote of thanks was proposed to the Rev. & Mrs. Sarvananthan and their helpers for all the arrangements that were so well made for this Rally.

— *Cor.*

## Missionary expelled from India

The Rev. Rosario Stroscio, a Roman Catholic Missionary who had worked in India for 40 years had to leave early this year on an order of expulston, first served on him in June 1977 and later extended for brief periods till January this year when he was finally asked to leave.

No specific reasons have been given for his expulsion but it is suspected that his work among tribal people got him into trouble with local landlords and through their influence with powers higher up.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/8920/78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 21st September, 1979.